மாகாணக் கல்வி திணைக்களம் சபரகமுவ – வார பாடசாலை

வாரம் - 08

பாடம் - கர்நாடக சங்கீதம்

தரம் - 13

செல்வி செல்லையா சிவநந்தனி

ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

# தாளதசப் பிராணங்கள்

1. காலம் என்றால் என்ன?
2. ஒரு கணம் என்பது யாது?
3. சூக்கும காலம், ஸ்தூல காலம் குறிக்கும் அலகுகளை பற்றிக் குறிப்பிடுக.
4. ஷட்மார்க்கங்களை தருக.
5. பல்லவி பாடுவதற்குப் பயன்படும் மார்க்கங்கள் எவை?
6. கிரியை என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?
7. சசப்த கிரியை என்றால் என்ன? உதாரணம் தருக.
8. நிஷப்த கிரியைக்கு உதாரணம் 2 தருக.
9. ஷடங்கத்தையும், அதன் குறியீடுகள் மற்றும் எண்ணிக்கைகளை முறையே குறிப்பிடுக.
10. சோடசாங்கங்கள் என்றால் என்ன?
11. கிரஹம் என்றால் என்ன உதாரணம் தந்து விளக்குக.
12. 35 தாளங்கள் உருவாகும் முறையைத் தருக.
13. களை என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?
14. களையின் பிரிவுகளையும், அவற்றின் அட்ஷர முறையையும் குறிப்பிடுக.
15. துவி, ஏக களையில் பாடப்படும் உருப்படிகளை தருக.
16. லயத்தின் பிரிவுகளை உதாரணம் தந்து விளக்குக.

17. யதி என்பதன் விளக்கம் யாது?

18. ஷட்யதிகளைக் குறிப்பிடுக.

19. **தகதரிகிடத - த – தகதிமி – தகிட** எனும் சொற்கட்டு அமைந்த யதி யாது?

20. வேத மத்திம யதி என அழைக்கப்படும் யதி எது?

21. ஷோடஷாங்கத்தையும் அவற்றின் குறியீடுகள் மற்றும் எண்ணிக்கை முறையே தருக.

22. பின்வரும் யதிகளை படம் வரைந்து அவற்றிற்கு ஒவ்வொரு உதாரணம் தந்து விளக்குக.

- கோபுச்சயதி
- ஸ்ரோதோவஹ யதி
- டமரு யதி
- மிருதங்க யதி